<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 81/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ரேவதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பழனிச்சாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.04.2023.

<u>**( முதல் விசாரணை ):**</u>

நான் தற்போது தாசர்பட்டியில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தின்போது கோவிந்தாபுரத்தில் வசித்து வந்தேன். 28.09.2021 அன்று மதியம் 1.30 மணிக்கு உடுமலையில் உள்ள சேரன் நகருக்கு நானும் தோழி பானுப்பிரியாவும் வேலை விஷயமாக வந்தோம். சேரன் நகரில் உள்ள வெற்றிவேல் நகரில் உள்ள கருப்புசாமி என்பவரது வீட்டில் நான் கருப்புசாமி சரண்யா பானுப்பிரியா ஆகியோர் இருந்தோம். சிறிது நேரம் கழித்து திணையரசுபுகழ் என்பவர் அங்கு வந்தார் அப்போது அங்கிருந்த தனி அறையில் நானும் திணையரசுபுகழ் உல்லாசமாக இருந்தோம். அதற்கு மேற்படி திணையரசு புகழ் எனக்கு ரூ.500/- கொடுத்தார். அதை நான் சரண்யாவிடம் கொடுத்தபோது அவர் ரூ.300/- எடுத்துக்கொண்டு எனக்கு ரூ.200/- கொடுத்தார். அப்போது போலிசார் அங்கு வந்தார்கள். பின்பு என்னை காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். பின்பு எங்கள் அனைவரையும் விசாரணை செய்துவிட்டு மேற்படி சரண்யா கொடுத்த ரூ.200/- போலிசாரிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. திணையரசுபுகழ் என்பவர் யாருடைய நண்பர் என்றால் என்னுடைய நண்பர் ஆவார். அவரை நான் தான் வெற்றிவேல் நகரில் உள்ள வீட்டிற்கு வரச்சொன்னேன் என்றால் சரியல்ல. என்னுடைய நண்பர் என்பதால் எனக்கு தெரியாமல் வர வாய்ப்பில்லை என்றால் அவர் அசா1 பானுப்பிரியாவின் நண்பர். மேற்படி திணையரசுவை பானுப்பிரியா தான் வரச்சொன்னாரா என்றால் ஆமாம். எதிரிகள் இருவரும் எனக்கு ஏற்கனவே நண்பர்கள் என்றால் சரிதான். பானுப்பிரியாவுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் திணையரசுவை வரச்சொல்லி நாங்கள் தனிமையில் இருந்தோம் என்றால் பானுப்பிரியா திணையரசுவை வரச்சொல்லி நான் நண்பர் என்பதால் அவருடன் தனிமையில் இருந்தோம்.

2. நானும் திணையரசுவும் தனிமையில் இருந்ததற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் அவர்கள் தனியாக தனி அறையில் இருந்தார்கள். எதிரி சரண்யா என்னிடம் இருந்து பணம் ரூ.300/– வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல வாங்கினார். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் பானுப்பிரியாவும் ஏற்கனவே மேற்படி செயலில் ஈடுபட்டு வந்ததால் எதிரிகளை பொய்யாக இந்த வழக்கில் தொடர்பு படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.